செய்தி வெளியீடு எண் :23 நாள் :12.03.2021

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021**
**வாக்காளர்கள் நூறு சதவிகித வாக்குப்பதிவினை உறுதி செய்திடும் பொருட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில், இராட்சத வண்ண பலூனை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் வானில் பறக்க விட்டார்:-**

*******

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்தில் வாக்காளர்கள் நூறு சதவிகித வாக்குப்பதிவினை உறுதி செய்திடும் பொருட்டு, பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் இன்று (12.03.2021) தேனி பழைய பேருந்து நிலையம், நேரு சிலை அருகில், இராட்சத வண்ண பலூனை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் வானில் பறக்க விட்டார்:-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்திலுள்ள 198. ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர், மற்றும் 201.கம்பம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நூறு சதவிகித வாக்குப்பதிவை உறுதி செய்திடும் பொருட்டு, வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் செயல் விளக்க விழிப்புணர்வு முகாம்கள், அதிநவீன மின்னணு திரை வாகனம் வாக்காளர்கள் விழிப்புணர்வு படக்காட்சிகள் நடத்துதல், மகளிர் சுய உதவிக்குழுவினரின் விழிப்புணர்வு வண்ண கோலமிடுதல், வாக்காளர்கள் கையெழுத்து இயக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி, விழிப்புணர்வு (Selfie) பாதகை, கல்லூரி மாணவ, மாணவியர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்காளர்கள் நூறு சதவிகிதம் வாக்களிக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தியும் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்களர்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து, எனது வாக்கு எனது உரிமை மற்றும் தேர்தல் நாள் ஏப்ரல்-06-2021 ஆகிய விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய இராட்சத வண்ண பலூன் இன்றைய தினம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பறக்க விடப்பட்டது. இப்பலூன் 50 அடி விட்டமும், 15 அடி உயரமும் கொண்ட இந்த இராட்சத பலூன், தேர்தல் முடியும் வரை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் வானில் பறந்து கொண்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக பொதுமக்கள் வெளியே செல்லும் போது கட்டாயம் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது மற்றும் சுற்றுப்புறப்பகுதிகளை சுகாதாரமாக வைத்து கொள்வது போன்ற நடவடிக்கைகளை கடைபிடித்து, மாவட்டத்தில் வாக்காளர்கள் நூறு சதவிகிதம் வாக்களித்து, தங்களது ஜனநாயக கடமையினை நிறைவேற்றிட மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இ.சாய் சரண் தேஜஸ்வி, இ.கா.ப., தேனி காவல் துணை கண்காணிப்பாளர் முத்துராஜ், தேனி வட்டாட்சியர் தேவதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**